Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04 விலை [illegible] 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ மீ ஆடி 6 ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (22 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 28 ஓசை 154

## அரபுநாட்டில்போல கிழக்கில் பாதிரியாரும் முதியவரும் கல்லால் அடித்துக்கொலை!

(மட்டக்களப்பு)

சாயமடைந்த தமிழ் பெண்ணுக்கு உதவியதற்காக பாதிரியார் முஸ்லிம்களால் பொல்லால் அடித்துக் கொல்லப்பட்டார். துணைக்குச் சென்ற முதியவர் கல்லால் எறிந்து கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:- மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் கடந்த 18ஆம் திகதி நடந்த ஹெலித்தாக்குதலில் ஒரு இளம்பெண் படுகாயமடைந்தார். இவரை மட்டக்களப்பு அம்புறூஸ் பாதிரியார் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது வழியிலேயே இப்பெண் மரணமடைந்து விட்டார்.

பின்னர் பாதிரியார் திரும்பிவரும் வழியில் காத்தான்குடியில் வைத்து முஸ்லிம் மக்களால் பாதர் அம்புறூஸ் வழிமறித்து (4ஆம் பக்கம் பார்க்க)

# 17 பொலிஸார்: புலிகள் விடுதலை


## விடுதலையடைந்தோர் புலிகளுடன் சேர விருப்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜூன் மாதம் பதினொராம் திகதி சிறிலங்கா அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்ட காலகட்டத்தில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் இருந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த பதினேழு முஸ்லிம், தமிழ் பொலிசார் நேற்று மாலை கோண்டாவிலில் விடுதலைப் புலிகளின் செயலகத்தில் வைத்து பத்திரிகையாளர் முன்னிலையிலும் மக்கள் முன்னிலையிலும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் யூன் மாதம்13ஆம் திகதிஇரவு 3 30 மணியளவில் சரணடந்தவர்களாகும்.

இவர்களிடம் நீங்கள் சரணடைந்ததற்கான காரணம் என்ன? என்று கேட்டதற்கு விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்போவதாகவும் இதனால்தங்களைப் பின் பக்கத்தினால் வெளியேறச் சொன்னதினால் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காகவும், விடுதலைப் புலிகள் தமது உயிருக்குப் பங்கம் விளைவிக்க மாட்டார்கள்என்பதாலும் தாங்கள் சரணடைந்ததாக கூறினார்கள் இக்கேள்விக்கு பொத்துவிலைச் சேர்ந்த எஸ். ரீ. எம் மின்சாத் என்பவர் பதிலளிக்கையில் தாம் விடுதலைப் புலிகளுக்கு (4ஆம் பக்கம் பார்க்க)



நேற்று விடுதலை செய்யப்பட்ட பொலிஸாரின் ஒரு பகுதியினரையும், மன்னார் - கொண்டச்சி மரமுந்திரிகைப் பண்ணை இராணுவ முகாம் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பவல் கவச வாகனமும் படங்களில் காணலாம்.

# முள்ளிக்குளம் சென்ற ராணுவம்மீது புலிகள் தாக்குதல்; 7 ராணுவம் பலி!

(மன்னார்)

மன்னார் - தள்ளாடி முகாமிலிருந்து நேற்றுக் காலை பத்து மணியளவில் இருபது வாகனங்களில் புறப்பட்டு முள்ளிக்குளம் நோக்கிச் சென்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் பத்தாம் கட்டையில் வைத்து எதிர்த்தாக்குதல்கள் நடாத்தினர்.

இச்சம்பவத்தின் போது ஏழு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்ரர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டனர்.

இங்கு தொடர்ந்து சண்டை நடைபெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வானத்தாக்குதலால் குருநகரில் 200வீடுகள், 100கடைகள் சேதம்

(விசேட நிருபர்)

குருநகர் பகுதியைத் திட்டமிட்டு சிறிலங்கா விமானப் படையும், யாழ். கோட்டை இராணுவமும் அழித்து வருகிறது.

இதுவரை விமானத் தாக்குதல்களாலும், ஷெல், ஹெலித் தாக்குதல்களாலும் இருநூற் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால்

(பண்டத்தரிப்பு)

தமிழகத்தில் நடைபெற்ற ஹர்த்தாலுக்கு ஆதரவாக பண்டத்தரிப்பு, சங்கானை, இளவாலை, மாதகல், சில்லாலை பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

## கொழும்பில் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றின் நிருபராக கடமை

## யாழ். நகர்மீது

தமிழனுக்கோர் நாடில்லை என்ற

# குறையைப் போக்கும் வரலாற்றுக் கடமை அனைவருக்கும் உண்டு

\- யோகி

(யாழ்ப்பாணம்)

''உலகில் எட்டுக்கோடி தமிழ் மக்கள் வாழுகின்றார்கள். இருந்தும் எங்களுக்கு என்றொரு நாடு இல்லை.

வரலாற்றில் ஏற்பட்டுள்ள இந்தக் குறையை போக்குவதற்காக நடாத்தப்படும் தியாகப் பயணம் தான் தமி

ழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலா

சரணடந்தவர்களாகும்.

இவர்களிடம் நீங்கள் சரணடைந்ததற்கான காரணம் என்ன? என்று கேட்டதற்கு விடுதலைப் புலிகள் வதாகவும் இதனால் தங்களைப் பின் பக்கத்தினால் வெளியேறச் சொன்னதினால் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காகவும், விடுதலைப் புலிகள் பதாலும் தாங்கள் சரணடைந்ததாக கூறினார்கள் இக்கேள்விக்கு பொத்துவிலைச் சேர்ந்த எஸ். ரீ. எம் மின்சாத் என்பவர் பதிலளிக்கையில் தாம் விடுதலைப் புலிகளுக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

### தமிழனுக்கோர் நாடில்லை என்ற

# குறையைப் போக்கும் வரலாற்றுக் கடமை அனைவருக்கும் உண்டு

**- யோகி**

(யாழ்ப்பாணம்)

''உலகில் எட்டுக்கோடி தமிழ் மக்கள் வாழுகின்றார்கள். இருந்தும் எங்களுக்கு என்றொரு நாடு இல்லை. வரலாற்றில் ஏற்பட்டுள்ள இந்தக் குறையை போக்குவதற்காக நடாத்தப்படும் தியாகப் பயணம் தான் தமிழீழப் போராட்டம் என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும்'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி கூறினார்.

தமிழீழ தாயக மீட்பு நிதிக்கான பொதுக் கூட்டமொன்று நேற்றுக் காலை யாழ். கனகரத்தினம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. அங்கு சமுகமளித்திருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் பேசும் பொழுதே திரு. யோகி தமிழ் மக்களின் குறைபாடு பற்றி இதனைக் கூறினார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய திரு. யோகி 'எமக்கென்றோர் கட்டுப்பாடான படை அணி உண்டு. கட்டுப்பாடு மிக்க மாபெரும் தலை

(4ஆம் பக்கம் பார்க்க)

### மகனை போருக்கு அனுப்பும்தாய்!

(மட்டுவில்)

சிறிலங்கா அரசுக்கு எதிராக போரிடுவதற்காக பன்னிரெண்டுவயதுடைய மகனை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளார் ஒரு தாய்.

மட்டுவிலைச் சேர்ந்த திருமதி செல்வராணி என்னும் தாயே இவ்

(4ஆம் பக்கம் பார்க்க)



# அப்பாவி தமிழர் கொல்லப்படுவதற்கு பாரதீயஜனதா தலைவர் கண்டனம்

(சென்னை)

இலங்கையில் தீவிரவாதத்தை அடக்குவது என்ற பெயரில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை பாரதிய ஜனதா கட்சித் தலைவர் எம். கே. அட்வானி கண்டித்துள்ளார்.

நேற்று சென்னையில் இக்கட்சியின் செயற் குழுக் கூட்டத்தை இவர் ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து வந்த பாராளுமன்ற குழு பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களை சில தினங்களுக்கு முன்பு சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசியதாகக் குறிப்பிட்ட அவர் அக்குழுவிடம் பாரதிய ஜனதாக் கட்சியின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறினார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளுக்கு வேட்டி, சேலை குழந்தைகளுக்கு கல்வி வசதி

## தஞ்சமடைந்துள்ள தமிழர்களுக்கு முதல்வர் கருணாநிதி நேரில் ஆறுதல்

(சென்னை)

இதுவரை 28,725 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாடு வந்துள்ளதாக தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழ்நாட்டிலுள்ள பல அகதி முகாம்களை சுற்றிப் பார்வையிட்ட தமிழக முதல்வர் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு ஆகஸ்ட் பதினைந்து சுதந்திர தினத்தை ஒட்டி இலவச வேட்டி, சேலை சாரம் என்பனவற்றை வழங்குமாறு பணித்துள்ளதுடன், முகாம்களில் உள்ள சிறுவர்களை தொடக்கப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்வதற்கும், எட்டாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களை உயர்நிலைப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளுவதற்குமான ஆணையை பிறப்பித்துள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

(மன்னார்)

மன்னார் - தள்ளாடி முகாமிலிருந்து நேற்றுக் காலை பத்து மணியளவில் இருபது வாகனங்களில் புறப்பட்டு முள்ளிக்குளம் நோக்கிச் சென்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் பத்தாம்கட்டையில் வைத்து எதிர்த்தாக்குதல்கள் நடாத்தினர்.

இச்சம்பவத்தின் போது ஏழு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்ரர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டனர். இங்கு தொடர்ந்து சண்டை நடைபெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கொழும்பில் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றின் நிருபராக கடமையாற்றும் ஒருவர் இங்கு பொலிசாரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டதாக கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

சில அரச அலுவலகங்களில் பணி புரியும் இளம் தமிழ் ஊழியர்களும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

### சாவகச்சேரியில் ஹெலி தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் நாளாந்தம் ஹெலி, பொம்மர் சுற்றிக்கொண்டும், ஆங்காங்கே சுட்டுக்கொண்டும் ''கிறனைற்'' வீசிக்கொண்டும் இருக்கின்றன.

நேற்று முன்தினம் ஹெலியிலிருந்து ''கிறனைற்'' வீசப்பட்டதால் சிலர் சாவகச்சேரியில் பலத்த காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

### கடை உடைத்து பணம் கொள்ளை

(பருத்தித்துறை)

புலோலியில் உள்ள ஒரு புத்தகசாலை நள்ளிரவு நேரம் உடைக்கப்பட்டு விற்பனைப் பணம் ஆறாயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

### வேடிக்கை பார்த்துப் பலி!

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை சிறிலங்கா விமானமொன்று வீசிய துர்நாற்றம் வீசும் மலக்குண்டு வீசப்பட்ட இடத்தை வேடிக்கை பார்க்கச் சென்ற சிலர் தொடர்ந்துவந்த பொம்மர் விமானத்தைக் கண்டு பயந்து ஓட்டம் பிடித்த போது திருநெல்வேலியில் பல்கலைக்கழகத்துக்குப் பின்புறம் விபத்தில் இருவர் சிக்கினர். இவர்களில் ஒருவர் பின்னர் மரணமானார்.

# வானத்தாக்குதலால் குருநகரில் 200வீடுகள், 100கடைகள் சேதம்

(விசேட நிருபர்)

குருநகர் பகுதியைத் திட்டமிட்டு சிறிலங்கா விமானப் படையும், யாழ். கோட்டை இராணுவமும் அழித்து வருகிறது.

இதுவரை விமானத் தாக்குதல்களாலும், ஷெல், ஹெலித் தாக்குதல்களாலும் இருநூற்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஹர்த்தால்

(பண்டத்தரிப்பு)

தமிழகத்தில் நடைபெற்ற ஹர்த்தாலுக்கு ஆதரவாக பண்டத்தரிப்பு, சங்கானை, இளவாலை, மாதகல், சில்லாலை பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

### யாழ். நகர்மீது

# மூன்று மணி நேரக் குண்டு வீச்சு; உணவுப்பொதிகளும் போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை 7·20 மணி முதல் பகல் பத்துமணி வரை யாழ். நகரப் பகுதியில் இரு அவ்ரோ விமானங்களும், ஒரு குண்டுவீச்சு விமானமும் கோட்டைப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டு கோட்டைக்குள் உணவுப் பொட்டலங்கள் போடும் நடவடிக்கையைமேற்கொண்டன.

குண்டுவீச்சு விமானம் குண்டுபொழிய அவ்ரோ விமானங்கள் உணவுப்பொட்டலங்களை வீசின.

ஆனால் இந்த உணவுப் பொட்டலங்களில் பெரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கைதான 18 பேர் பற்றி தகவல் எதுவும் இல்லை

(திருக்கோணமலை)

திருமலையில் பதினெட்டு அகதிகள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நிலைபற்றி இன்னமும் எதுவும் தெரியவில்லை.

கடந்த 20ஆம் திகதி அன்று திருமலையிலுள்ள நிலாவெளி தேவாலயத்தில் அகதிகளாக இருந்த 18 அகதிகளை சிங்கள இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

பின்னர் இவர்களை விடுவிப்பதற்காக கிறிஸ்தவ மத குரு ஒருவர் போய் முகாமில் கேட்டபோது தாம் பிடிக்கவில்லை என்றும் கிறீன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய முன்னணி அரசுக்கு பாரதீய ஜனதா முழு ஆதரவு

(சென்னை)

தேசிய முன்னணி அரசுக்கு பாரதீய ஜனதா கட்சி முழு ஆதரவு அளிக்கும் என்று பாரதீய ஜனதா கட்சி தலைவர் எம். கே. அட்வாணி தெரிவித்தார்.

நாட்டின் நலனை முன்னிட்டு ஜனதா தள் அக்கட்சியில் உள்ள கருத்து வேற்றுமைகளை நீக்க வேண்டும்.

ஹரியானா முன்னாள்முதல்வர்சௌதாலாவின்பிரச்சினையால் ஜனதா தள் கட்சியிடம் மக்களுக்கு இருந்த நம்பிக்கையை ஆட்டம் காணச் செய்துவிட்டது.

இதனால் தேசிய முன்னணி அரசின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இவ்வாறு திரு. அட்வானி கூறினார்.

## மருந்து, உணவு, தபால் 25 லொறிகளில் வந்தன

(யாழ்ப்பரணம்)

கொழும்பிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், மருந்துப் பொருள்களையும், தபால் பொதிகளையும் ஏற்றிவந்த 25 லொறிகள் நேற்று யாழ் நகர் வந்துசேர்ந்தன.

7 லொறிகளில் மாவும், [illegible] லொறிகளில் அரிசியும், [illegible] லொறிகளில் சீனியும், [illegible] லொறியில் பருப்பும், மருந்துப் பொருள்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கான நிவாரணப் பொருள்களும்இவற்றிலடங்குகின்றன.

விற்றாஸ்பிறே, லக்ஸ்பிறே, திரிபோஷா போன்ற பால்மா, சத்துணவுஆகியனவும் தருவிக்கப்பட்டுள்ளன என்று செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் கடந்த ஒன்றரை மாதங்களாகக் கொழும்பில் தேங்கிக்கிடந்த யாழ்ப்பாணக் கடிதங்கள் நேற்று யாழ் நகர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசெப் இராணுவமுகாமில் இளைஞர் சித்திரவதை

(வவுனியா)

வவுனியா ஜோசெப் இராணுவமுகாம் தமிழ் இளைஞர்களின் சித்திரவதைக் கூடாரமாக மாற்றமடைந்து வருகிறது.

கைதுசெய்யப்படும்இளைஞர்கள், இராணுவத்தினரால் நிர்வாணப் படுத்தப்பட்டு, எஸ்-லோன் குழாய்களினால் தாக்கப்படுகின்றனர்.

அண்மையில் வவுனியா கோவில் புதுக்குளத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஓராண்டு நினைவலைகள்



## லெப்ரினன்ட் "ஆஷா"

### (வல்லிபுரம் விமலேஸ்வரன்)

தாயகத்தாய் மடியில் 11 - 01 - 1969

தமிழீழத்தாய் விடிவில் 22 - 07 - 1989

''ஆஷா'' வாக அவதாரம் எடுத்தவனே - ஈசா
காலம் வரும் என்று காத்திருந்த எங்களுக்கு
கண்ணீர் சிந்தும் சோகநிலை வந்ததய்யா
கோடிகள் கிடைத்தாலும் கோபுரங்கள் உயர்ந்தாலும்
ஈசா உன் இழப்புக்கு ஈடாக எதுவுமில்லை.

தம்பி நீ எம்மோடு நெடுந்தூரம் வருவாயென்று

சிற்றூரவைகள்

# உறுதியாகவும் விரைவாகவும் செயற்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்) - ஆஞ்சநேயர்

தமிழீழ மக்களின் உயிருக்கும்உடைமைக்கும் உத்தரவாதம் கொடுப்பதற்கு சிற்றூரவைகள் சுறு சுறுப்பாகவும், உறுதியுடனும் செயல்பட வேண்டும் என்று உடுவிலில் நடந்த வட்டவை உறுப்பினர் மத்தியில் பேசுகையில் வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ஒவ்வாரு கிராம மக்களுடனும் சிற்றூரவை உறுப்பினர்கள் கலந்துரையாடி நிலைமைகளை எடுத்துக் கூறி மீட்பு நிதி சேர்ப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். அதே வேளை சிற்றூரவைக்குப் புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும் என்று கூறினார்.

போராளிகள் இறக்கும் பொழுது அவர்களின் இறுதி அஞ்சலிகளில் கலந்து கொண்டு மற்றவர்களுக்கு முன்னோடிகளாக சிற்றூரவையின் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## அரச அதிகாரிகள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ் செயலகத்தில் நடைபெற இருந்த நிவாரண வேலைகள், உணவு விநியோகம், மற்றும் வங்கிகள், இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆகியவை சம்பந்தமான அரச அதிகாரிகளுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை பத்துமணிக்கு யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும் என்றும் ஆடி அமாவாசைக்காகவே இக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் யாழ் அரச அதிபர் திரு.அன்ரன் அல்பிரட் அவர்கள் தெரிவித்தார். (ம)

## ஆலய உற்சவம்

(கொழும்புத்துறை)

பனிப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த 14ஆந் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

## தானியங்கள் கொள்வனவு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பன்னிரண்டு கமநலச் சேவை நிலையங்களும் தத்தமது பகுதியில் உள்ள விவசாயிகளிடமுள்ள கௌப்பி, குரக்கன், தினை, பயறு, மற்றும் மரக்கறி விதைகளை உடனடியாகக் கொள்வனவு செய்கின்றன

மிகத் தரமான விதைகளை வைத்திருக்கும் விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் பெரும்பாக உத்தியோகத்தருடனும், விவசாயப் போதனாசிரியருடனும், தங்கள் பகுதிக் கமநலச் சேவை நிலையத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விரும்பிய விவசாயிகள் கமநல சேவை நிலையங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (24)

## பத்திரம் வந்ததும் ஓய்வூதியம்

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இ. பராசத்தி (தேவி)

மலர்வு 4 - 02 - 1945 உதிர்வு 22 - 07 - 1984

அம்மாவை இழந்து இன்று ஆண்டுகள் ஆறம்மா
ஆண்டுகள் அறுபதுதான் சென்றாலும் – அம்மா
எனும் மொழிக்கு ஒப்பாக ஓர் மொழியை
எப்போ நாம் காண்போம் உனது பாசம்
உணருமுன்னே உனை இழந்த மகள்-

கருமாரி மோட்டோர்ஸ்
தென்மயிலை,
தெல்லிப்பளை.

லாவண்யா, தந்தை, தாய்
சகோதரர்கள்.

(R/525)

# ஓராண்டு நினைவஞ்சலி

23-07-1990



பாலசுப்பிரமணியம்
மகேந்திரதாஸ்
வல்வை



துரைராஜா
நாகதாஸ்
மயிலிட்டி



பாலசுப்பிரமணியம்
ரவீந்திரதாஸ்

## லெப்ரினன்ட் "ஆஷா"

### (வல்லிபுரம் விமலேஸ்வரன்)

தாயகத்தாய் மடியில்
11 - 01 - 1969

தமிழீழத்தாய் விடிவில்
22 - 07 - 1989

''ஆஷா'' வாக அவதாரம் எடுத்தவனே - ஈசா
காலம் வரும் என்று காத்திருந்த எங்களுக்கு
கண்ணீர் சிந்தும் சோகநிலை வந்ததய்யா
கோடிகள் கிடைத்தாலும் கோபுரங்கள் உயர்ந்தாலும்
ஈசா உன் இழப்புக்கு ஈடாக எதுவுமில்லை.

தம்பி நீ எம்மோடு நெடுந்தூரம் வருவாயென்று
நம்பியிருந்தோமே! நடுவழியில் ஏன் பிரிந்தாய்?
தமிழீழம் மீட்பில் உன் கடமை முடிந்ததோ
நம் கடமை முடியும் போது நாமும் வருவோம் - ஈசா
உன்னடிக்கே! இது தான் உண்மையடா!

''ஆசைமாமா'' என்ற மழலைமொழி கேட்கவில்லை - உன்
உறவைச் சொல்லி அழைக்கின்றார், உன் நினைப்பு தெரியவில்லை
தமிழீழம் வென்றெடுக்க தாய்மாமன் போனான் என்று
கதையாகச் சொல்லச் சொல்லி கலங்க வைத்துப் போனாயோ!

ஆற்றுவார் ஆற்றினாலும் ஆறாது எம் துயரமய்யா
தேற்றுவார் தேற்றினாலும் தேறாது எம் இதயமய்யா
மாற்றிடவோ மார்க்கமில்லை எம்மரணங்கள் தான் மறையச்செய்யும்.

''சமுத்திர தாரா''
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தாய், தந்தை, சகோதரங்கள், சகோதரிகள்,
மருமக்கள், மைத்துனர்கள்.

(R/ 509)

தங்கள் பகுதி விவசாயப் பெரும்பாக உத்தியோகத்தருடனும், விவசாயப் போதனாசிரியருடனும், தங்கள் பகுதிக் கமநலச் சேவை நிலையத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விரும்பிய விவசாயிகள் கமநல சேவை நிலையங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (24)

## பத்திரம் வந்ததும் ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

வவுச்சர் பத்திரம் வந்ததும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஓய்வூதியம் வழங்குவதற்கு யாழ் செயலகத்தில் போதியளவு வவுச்சர் பத்திரம் இல்லாததினாலேயே ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படுத்தவேண்டி உள்ளது. வவுச்சர் பத்திரம் கொழும்பில் இருந்து வந்ததும் ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும் வவுச்சர் போம் வரத்தாமதம் ஏற்படுமாயின் ஒய்வூதியம் வழங்குவதற்கு வேறு ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)





| | | |
|---|---|---|
| பாலசுப்பிரமணியம் மகேந்திரதாஸ்<br>வல்வை<br>(சிதம்பராக் கல்லூரி மாணவன்) | துரைராஜா நாகதாஸ்<br>மயிலிட்டி<br>(வரையறுக்கப்பட்ட லங்கா சீமேந்து மின்னியலாளர்) | பாலசுப்பிரமணியம் ரவீந்திரதாஸ்<br>வல்வை |
| பிறப்பு: 25-10-1973<br>அழிப்பு: 03-08-1989<br>திதி: 23-07-1990 | பிறப்பு: 29-08-1961<br>அழிப்பு: 03-08-1989<br>திதி: 23-07-1990 | பிறப்பு: 08-10-1968<br>அழிப்பு: 13-07-1989<br>திதி: 02-07-1990 |

சீரோடு சிறப்போடு சிறந்த நல்ல செல்வங்கள்
காரோடு முகில் மறைத்த கதிர் மதியும் போலின்று
வேரோடு மரம்புரண்டு வீதியிலே வீழ்ந்ததுபோல்
ஊரோடு உற்றாரும் உமை நினைந்து வாடுகின்றார்.

வேம்படி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(R. 539)


தரமானது...

சுத்தமானது...

எமது அரிசி ஆலையில் நீங்கள் வாங்கும் அரிசி வகைகளின்
தரத்திற்கும், சுத்தத்திற்கும்
நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

மாப்பியன் அரிசி ஆலை சுதுமலை, மானிப்பாய்.

(B.1274)

### சிந்தனைக்கு

மனித அறிவாற்றலை, மேதையின் சிகரங்களிலிருந்து மட்டுமல்ல, திறமையற்ற இயலாமை என்னும் படுகுழிகளிலிருந்தும் ஆராய்ந்து சிந்திக்க வேண்டும்.

– ஏ. இ. ஹபுஸ்மன்


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 22-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## இது என்ன யுத்த தர்மம்?

போர் புரிவதில் சில தர்மங்கள் கடைப்பிடிக்கப் படுவது புராண இதிகாச காலத்தில் மட்டுமல்ல இந்த அணு ஆயுத காலத்திலும் உண்டு.

இரண்டாவது உலகப் போரில் ஜப்பானில் ஹிரோஷிமா நாகசாகி ஆகிய நகரங்கள் மீது அணுகுண்டு போட்டு அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று வரை அணுவாயுதங்களுக்கு உலகில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டே வருகிறது.

அணுஆயுதங்களை உற்பத்தி செய்துவைத்திருக்கும் நாடுகளே அவற்றை உபயோகப்படுத்துவதற்கு அஞ்சுகின்றன. காலத்துக்குக்காலம் இந்த ஆயுதங்கள் சம்பந்தமாக கட்டுப்பாடுகளை வகுத்துக்கொள்கின்றன.

சமீபத்தில் காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பெரும் நெருக்கடிநிலை தோன்றியபோது இருநாடுகளும் அணுகுண்டுகளை உபயோகிக்கக் கூடும் என்ற அச்சம் எழுந்தது.

அணு ஆயுத யுத்தம் ஒன்று ஏற்பட்டால் உலகமே அழிந்துவிடும் ஆபத்து ஏற்படுவிடும் என்ற அச்சத்தினால் அணுஆயுத வல்லரசுகளே இந்திய பாகிஸ்தான் நெருக்கடியைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி ''சூட்டைத்'' தணித்தன.

ஈராக்கிற்கும் ஈரானுக்குமிடையில் நீண்ட காலமாக நடைபெற்று வந்த போரில் இரசாயனக் குண்டுகள் உபயோகிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இக் குற்றச்சாட்டு ஐ. நா. அரங்கு வரை சென்றது.

''நேபாம்'' என்ற குண்டுகளும் போரில் உபயோகிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

நேபாம் குண்டுகள் இரசாயனக் குண்டுகள் போரில் உபயோகிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. இக் குண்டுகளை உபயோகிக்கும் நாடுகள் மனித உரிமைகளை மதிக்காத அநாகரிக நாடுகளாகவே உலகில் கணிக்கப்படுகின்றன.

சிறிலங்கா அரச படைகள் இதுவரை எந்த நாட்டுடனும் போர் செய்து அனுபவப்படவில்லை. இனியும் எந்த வெளிநாட்டுடனும் போர் புரியும் வாய்ப்பு சிறிலங்காப் படைகளுக்கு ஏற்படுமென்றும் எதிர்பார்க்க முடியாது.

1971ஆம் ஆண்டில் சிங்கள ஆதிக்கப்போட்டியில் சிங்கள இளைஞர்கள் சிறிலங்கா அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியொன்றை ஆரம்பித்தனர்.

இந்தக் கிளர்ச்சியைக்கூட அடக்கும் வல்லமை சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு இருக்கவில்லை. இந்தியப்படைகளே முதலில் சிறிலங்காவுக்கு உதவ பறந்து வந்தன. ரோகண விஜேவீரா தலைமையிலான ஜே. வி. பி. யின் ஆயுதக் கிளர்ச்சிதான் சிறிலங்கா ஆயுதப்படைகளுக்கு முதல் பெற்றுக் கொடுத்த போர் அனுபவம்.

1983ஆம் ஆண்டிலிருந்து சிறிலங்கா ஆயுதப்படைகள் தமிழ் மண்ணில் போர் புரிந்து வருகிறது.

சிறிலங்கா ஆயுதப்படைகள் முதலில் இந்தியாவில் பயிற்சி பெற்று இந்தியாவிலிருந்து ஆயுதங்களும்

# எதிரிக்குப் பதிலடி கொடுக்க
# எல்லா சக்தியும் ஒன்று திரண்டன

இரண்டாம் யுத்தத்தின் ஆரம்பக்கட்டத்தில் ஜேர்மன் துருப்புக்கள் பெலோருஷ்யா முழுவதையும், லித்துவேனியா, லாத்வியா, எஸ்தோனியா, மல்தாவியா, உக்ரேனின் பல பிரதேசங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி லெனின்கிராதுக்கு வெகு வெகு அருகில் வந்தனர். மரண அபாயம் சோவியத் யூனியனை எதிர்நோக்கியது. சோவியத் மக்கள் எவ்வளவு மகத்தான வீரத்தை வெளிப்படுத்திய போதிலும் போர் முனையில் நிலவிய மிக மோசமான சூழ்நிலையை இதனால் அடிப்படையில் மாற்ற இயலவில்லை. எதிரிக்கு தக்க பதிலடி தருவதற்காக எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டக் கூடிய பொது அரசு நடவடிக்கைகள் தேவைப்பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சி இந்நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இது சிக்கலான, கடினமான சூழ்நிலையில் விரைவாக விஷயத்தைக் கிரகித்து, தாய் நாட்டைப் பாதுகாக்க சோவியத் மக்களைத் தட்டியெழுப்பியது. நாடு முழுவதும் ஒரே யுத்த முகமாக மாற்றப்பட்டது. 'எல்லாம் போர்முனைக்கே, எல்லாம் வெற்றிக்காக' என்ற கட்சியின் கோஷம் சோவியத் மக்கள் அனைவருக்கும் கட்டாயச் சட்டமாக மாறியது.

**வி. அ. மத்சுலேன்கோவின்**
**இரண்டாவது உலகயுத்தம் என்னும் நூலில் இருந்து**

ஜூலை இறுதியில் மொத்தம் 3,28,000 நபர்களையுடைய 1,755 சண்டை பட்டாலியன்கள் உருவாக்கப்பட்டன. எதிரி நாச வேலைக்காரர்கள் மற்றும் பாரசூட் படையினருக்கு எதிரான போராட்டத்தில் இவை முக்கியப் பங்காற்றின. பின்னால் இந்த பட்டாலியன்களில் பெரும் பகுதி நிரந்தர இராணுவத்தில்சேர்ந்தன 1941ஆம் ஆண்டின் கடுமையான கோடையிலும் இலையுதிர்க் காலத்திலும் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், மாணவர்களைக் கொண்டு

1941 இறுதியில் 400க்கும் அதிகமான செஞ்சேனை டிவிஷன்களை உருவாக்க முடிந்தது. யுத்தத்தின் முதல் அரையாண்டில் மட்டும் கம்யூனிஸ்டுக் கட்சி 11லட்சத்துக்கும் அதிகமான கம்யூனிஸ்டுகளையும் 20 லட்சம் கம்சமோல் உறுப்பினர்களையும் 8,800 பொறுப்பு மிக்க கட்சிப் பணியாளர்களையும் இராணுவத்திற்கு அனுப்பி வைத்தது. ஜேர்மனி இராணுவத்திற்கு எதிராக சோவியத் மக்கள் ஒருமனதோடு போராட எழுந்தது அவர்களுடைய அரசியல் முதிர்ச்சிக்கும் தமது தேசபக்த மற்றும் சர்வதேசக்கடமையை அவர்கள் எவ்வளவு ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதற்கும் சான்று பகர்ந்தது.

யுத்தம் துவங்கியதும் ஹிட்லர் ஜெர்மனிக்கு எதிரான போராட்டம் பற்றிய ஆழ்ந்த விஞ்ஞான பூர்வமான திட்டத்தை கம்யூனிஸ்டுக் கட்சி வகுத்தது. இது சோவியத் யூனியனின் மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்திய கமிட்டியும் 1941 ஆம் ஆண்டு ஜூன் 29இல் வெளியிட்ட ஆணையில் விவரிக்கப்பட்டிருந்தது. சகல வித சக்திகளையும் சாதனங்களையும் யுத்த நலன்களுக்கு அர்ப்பணிக்குமாறும் சோவியத் உள்நாட்டின் பணியை மாற்றியமைக்குமாறும் தேசியப் பொருளாதாரத்தை யுத்த வழிக்கு மாற்றுமாறும் இராணுவத்தை சகல வழிகளிலும் பலப்படுத்துமாறும் எதிரி ஆக்கிரமித்த இடங்களில்கெரில்லா இயக்கத்தை வளர்த்திடுமாறும் சித்தாந்த-அரசியல் பணி முழுவதையும் மாற்றியமைத்திடுமாறும் இந்த ஆணை கட்சி, சோவியத் மற்றும் சமூக ஸ்தாபனங்களிடம் கோரியது. ''ஒரு நிமிடத்தைக் கூட வீணடிக்காது, எதிரியுடனான போராட்டத்தில் ஒரு வாய்ப்பைக் கூட நழுவ விடாது விரை

யத் குடிமகனையும் அபாயத்தை நேரடியாகப் பார்க்குமாறு செய்தது.... நமது பல் தேசிய அரசின் மக்களினங்கள் அனைத்தும் தமது ஒருமனதான ஆன்மீக ஊக்கத்தால் ஆயுதப்பலத்தைப் பன்மடங்கு பெருக்கி உயர் தேச பக்த லட்சியத்தின் பெயரால், தமது தாய்நாட்டின் பாதுகாப்பின் பெயரால் எழுந்துநின்றனர்.'' என்று சோவியத் யூனியனின் மார்ஷல் ஜுக்கவ் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதினார்.

யுத்தத்தின் போக்கில் கம்யூனிஸ்டுக்கட்சி ''போரிடும்'' கட்சியாகவும், சமர் புரியும் கட்சியாகவும் கட்சியின் மத்தியக் கமிட்டி நாட்டிற்கும் இராணுவத்திற்கும் உயர் மட்ட அரசியல் மற்றும் போர்த்தந்திரத் தலைமையை அளிக்கும் போர்க்கள தலைமையகமாகவும் மாறியது. கட்சி உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் நிரந்தர இராணுவத்தில் இருந்தனர்.

எதிரி கைப்பற்றும் அபாயம் எதிர் நோக்கியிருந்த போர்முனை நகரங்களில் கட்சியின் பிரதேசக் கமிட்டி நகரக் கமிட்டி முதல் செயலாளர்களின் தலைமையில் நகரத் தற்காப்புக் கமிட்டிகள் தோற்றுவிக்கப்பட்டன. செவஸ்தோபல், தூலா, ரஸ்தோவ், ஸ்தாலின்கிராத், கூர்ஸ்க் ஆகிய நகரங்களிலும்– மொத்தமாக 60க்கும் மேற்பட்ட நகரங்களில்-தற்காப்புக் கமிட்டிகள் உருவாக்கப்பட்டன.

யுத்தத்தின் முதல் நாட்களிலேயே இராணுவத் தளபாடங்களை-டாங்கிகளையும் விமானங்களையும் - உற்பத்தி செய்யும் பிரச்சினைகள் சம்பந்தமாக சில கூட்டங்கள் அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்திய கமிட்டியின் பொலிட்பீரோவில் நடைபெற்றன. ஆயுத உற்பத்தி, தொழிற்துறைகளை நாட்டின் கிழக்கத்தியப் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லுவது ஆகியவற்றின் மீது கட்சியின் மத்திய கமிட்டி பெரும் கவனம் செலுத்தியது. உணவுப் பொருள் இருப்புகள் முதலில் செஞ்சேனைக்கும் தொழிற்துறை மையங்களில் இருந்த மக்க

டன. இது தொழிற்துறை நிலையங்களில் எண்ணிக்கையை அதிகப்படுத்தாமலேயே உற்பத்தித் திறன்களைக் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு உயர்த்த உதவியது.

14 இராணுவ வட்டங்களில் இராணுவ சேவை புரிய இருந்தவர்களை அணி திரட்டியது, யுத்தம் துவங்கியதும் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் மேற்கொண்ட முதல் நடை முறை ரீதியான நடவடிக்கைகளில் ஒன்றாகும். நாட்டின் மேற்குப் பிரதேசங்களில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டது. ஜூலை 1ஆம் தேதி வாக்கில் 53லட்சம் பேர் இராணுவத்தில் சேவை புரிவதற்காக அணி திரட்டப்பட்டிருந்தனர். தற்காப்பிற்கு ஏற்பாடு செய்தல், சட்ட ஒழுங்கைப் பராமரித்தல் அரசுப் பாதுகாப்பிற்கு வகை செய்தல் ஆகியவை சம்பந்தமான அரசு ஆட்சி உறுப்புகளின் பணிகள் பூராவும் சேனைகள், படைகள் மற்றும் இராணுவ வட்டங்களின் இராணுவக் கவுன்சில்களுக்கும், இவை இல்லாத இடங்களில் படை யூனிட்டுகளின் தலைமை உறுப்புகளுக்கும் அளிக்கப்பட்டன.

அக்டோபர் 13 ஆம் திகதி மாஸ்கோவில் கட்சித் தொண்டர்களின் கூட்டம் நடைபெற்றது இது ஜேர்மன் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உறுதியான, ஈவிரக்கமற்ற போராட்டத்தை நடத்துமாறும் கட்டுப்பாட்டைப் பலப்படுத்துமாறும் பீதியை பரப்புபவர்கள், பேடிகள், துரோகிகளுக்கு எதிராக உறுதியாகப் போராடுமாறும் கம்யூனிஸ்டுகள், கம்சமோல்

இவற்றைக் கொண்டும் உள்நாட்டுச் சண்டை பட்டாலியன்களைக் கொண்டும் மொத்தம் 39,000க்கும் அதிகமான ஆட்களையுடைய குடிமக்கள் தொண்டர் படையின் 4 டிவிஷன்கள் உருவாக்கப்பட்டன. போர்முனைக்கு உதவியாக அக்டோபர் மாதத்தின் முதல் பகுதியில் மாஸ்கோ மொத்தமாக கிட்டத்தட்ட 50,000 போர்வீரர்கள் அடங்கிய இராணுவத்தை கூடுதலாக அனுப்பி உதவியது. ஸ்தல வான் எதிர்ப்பு பாதுகாப்பு கணிசமாக பலப்படுத்தப்பட்டது. 25 ஸ்தல வான் எதிர்ப்பு பாதுகாப்பு பட்டாலியன்களும் 4 பழுது பார்த்து புனரமைக்கும் ரெஜிமென்ட்களும் கம்சமோல்-இளைஞர் ஸ்தல வான் எதிர்ப்பு பாதுகாப்பு ரெஜிமென்ட்டும் 3,600 சுய பாதுகாப்புக் குழுக்களும் உருவாக்கப்பட்டன.

நவம்பரில் தலைநகரின் உழைப்பாளிகள் போர்முனைக்கு மதிப்பிட முடியா உதவியை அளித்தனர். மோசமான பருவநிலைகளிலும் எதிரி விமானப்படை தாக்கிய போதிலும் மாஸ்கோவாசிகள் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தன்னலங் கருதாது உழைத்து ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் உற்பத்தி செய்தனர். நகருக்கு வரும் நுழைவாயில்கள் அருகேயும் நகரத்திலும் தற்காப்பு அரண்களைக் கட்டினர். தற்காப்பு காலகட்டத்தில் மாஸ்கோவாசிகள் மொத்தமாக 676 கி. மீ. டாங்கி எதிர்ப்பு அகழிகளையும் 445 கி. மீ. டாங்கி எதிர்ப்புக் குழிகளையும் தோண்டினர். 1,300 கி. மீ.க்கும் அதிகமான நீளத்திற்கு இரும்பு முள் கம்பி தடைகளைப் போட்டனர். 380 கி. மீ. நீளத்திற்கு டாங்கி எதிர்ப்புத் தடைகளை உருவாக்கினர். 30,000க்கும் அதிகமான பீரங்கி மேடைகளைக் கட்டினர். மாஸ்கோ அருகில் 1,528 கி. மீ. தூரத்திற்கு காட்டு தடையரண்கள் உருவாக்கப்பட்டன. மாஸ்கோ பிராந்தியத்தில் எதிரியிருந்த பகுதி

**இரண்டாம் உலகப் போரின் போது நவீன ஆயுதங்களுடனும் பெருமளவினதான இராணுவத்துடனும், மாற்றியமைக்கப்பட்ட இராணுவப் பொருளாதார வலிமையுடனும் சோவியத் ரஷ்யா மீது ஜேர்மனி படை எடுத்த போது, சோவியத் துருப்புக்களின் அசாதாரண வீரமும், ஆண்மையும், மக்களின் தன்னலமற்ற உதவியுமே ஹிட்லரின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கின.**

குண்டுகளை உபயோகிக்கும் நாடுகள் மனித உரிமைகளை மதிக்காத அநாகரிக நாடுகளாகவே உலகில் கணிக்கப்படுகின்றன.

சிறிலங்கா அரச படைகள் இதுவரை எந்த நாட்டுடனும் போர் செய்து அனுபவப்படவில்லை. இனியும் எந்த வெளிநாட்டுடனும் போர் புரியும் வாய்ப்பு சிறிலங்காப் படைகளுக்கு ஏற்படுமென்றும் எதிர்பார்க்க முடியாது.

1971ஆம் ஆண்டில் சிங்கள ஆதிக்கப்போட்டியில் சிங்கள இளைஞர்கள் சிறிலங்கா அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியொன்றை ஆரம்பித்தனர்.

இந்தக் கிளர்ச்சியைக்கூட அடக்கும் வல்லமை சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு இருக்கவில்லை. இந்தியப்படைகளே முதலில் சிறிலங்காவுக்கு உதவ பறந்து வந்தன. ரோகண விஜேவீரா தலைமையிலான ஜே. வி. பி. யின் ஆயுதக் கிளர்ச்சிதான் சிறிலங்கா ஆயுதப்படைகளுக்கு முதல் பெற்றுக் கொடுத்த போர் அனுபவம்.

1983ஆம் ஆண்டிலிருந்து சிறிலங்கா ஆயுதப்படைகள் தமிழ் மண்ணில் போர் புரிந்து வருகிறது.

சிறிலங்கா ஆயுதப்படைகள் முதலில் இந்தியாவில் பயிற்சி பெற்று இந்தியாவிலிருந்து ஆயுதங்களும் பெற்று வந்தது.

தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா பயிற்சி அளிக்கிறதென்று கூறி சிறிலங்கா பின்னர் பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்கள் பெற்றதுடன் சிறிலங்கா ஆயுதப்படைகளுக்குப் பயிற்சியும் பெற்றுக் கொடுத்தது.

விடுதலைப்புலிப் போராளிகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இஸ்ரேலியர்களின் 'மொஸாட்' பிரிவினரிடமிருந்து சிறிலங்கா ஆயுதப்படைகள் பயிற்சி பெற்றன. தொடர்ந்து வேறு பல இடங்களிலிருந்து ஆயுதங்களையும், பயிற்சியையும் பெற்றுக்கொண்டனர்.

ஆனால் எந்த நாடுகளும் எந்தப்போர் முனையிலும் பின்பற்றாத அநாகரிகமான போர்முறையை சிறிலங்கா சிங்கள ஆயுதப்படைகள் இலங்கையின் தமிழ்மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பின்பற்றுகின்றன.

இராணுவ முகாம்களிலிருந்து குடிமக்கள் வாழும் பகுதிகள் மீது கண்மூடித்தனமாக ஷெல் அடிக்கிறது சிறிலங்கா இராணுவம்.

வடக்கு, கிழக்கு கடல் பகுதியிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளுக்கு சரமாரியாக கடற்படைக் கப்பலிலிருந்தும் பீரங்கிப் படகுகளிலிருந்தும் பீரங்கித் தாக்குதல்களை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சிறிலங்கா விமானப் படையினர் வானத்திலிருந்து மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளின் மீது தடைசெய்யப்பட்ட நேபாம் குண்டுகளை வீசித்தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்தஎரிகுண்டுப்பீப்பாக்கள் உறுதியான 'கொங்கிறீட்' கட்டிடங்களையும் உடைத்து தீப்பற்றி எரியச் செய்கின்றன.

இந்தக் குண்டுகளைவிடப் புதுவித குண்டு ஒன்றையும் சிறிலங்கா விமானப்படை கண்டுபிடித்திருக்கிறது. கொடிய நோய்களை ஏற்படுத்தக்கூடிய வைரஸ் கிருமிகளுடன் மனித மலமும் கலந்து பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடைத்துப் போர்விமானங்களிலிருந்து மக்கள் வாழும் பகுதிகள் மீது வீசப்படுகின்றன.

இந்தக் குண்டுகள் மக்கள் வாழும் பகுதிகளில் விழுந்து வெடித்ததும் மனிதர் சுவாசிக்க முடியாதபடி பெரும் துர்நாற்றம் வீசுகிறது.

இந்தக் குண்டுகள் கொடிய தொற்றுநோயைப் பரப்பக்கூடியவையென்று ஆய்விலிருந்து தெரிய வந்திருக்கிறது.

இன்று சர்வதேச ரீதியில் இவ்வகை தொற்றுநோய் பரப்பும் வைரசு அடங்கிய குண்டுகள் தடை செய்யப்பட்டுள்ளதோடு, மிகவும் அபாயகரமானவை எனவும் கருதப்படுகின்றன.

இந்தக் குண்டுகள் எந்த நாட்டிலும் எந்தப் போர் முனையிலும் கேள்விப்படாதவை. தமிழ் மக்களைக் குண்டுபோட்டு அழிப்பதைவிட நோயாளிகளாக்கி அழிப்பது என்று சிறிலங்கா திட்டம் வகுத்துள்ளதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

யுத்த தர்மங்களையும் மீறி மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித் தனத்தையும் மிஞ்சிவிட்ட சிறிலங்கா சிங்கள பேரினவாத அரசின் இச்செயல் பற்றி இங்குள்ள சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்னமும் வாய்திறக்காமலிருப்பது விந்தையிலும் விந்தையே!!

## இரண்டாவது உலகயுத்தம் என்னும் நூலில் இருந்து

ஜூலை இறுதியில் மொத்தம் 3,28,000 நபர்களையுடைய 1,755 சண்டை பட்டாலியன்கள் உருவாக்கப்பட்டன. எதிரி நாச வேலைக்காரர்கள் மற்றும் பாரசூட் படையினருக்கு எதிரான போராட்டத்தில் இவை முக்கியப் பங்காற்றின. பின்னால் இந்த பட்டாலியன்களில் பெரும் பகுதி நிரந்தர இராணுவத்தில்சேர்ந்தன 1941ஆம் ஆண்டின் கடுமையான கோடையிலும் இலையுதிர்க் காலத்திலும் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், மாணவர்களைக் கொண்டு குடிமக்கள் தொண்டர் படையின் 60 டிவிஷன்களும் 200 தனிரெஜிமென்ட்களும் ஏராளமான பட்டாலியன்கள், கம்பெனிகள், பிளேட்டோன்கள் மற்றும் அணிகள் போன்ற படைப்பிரிவுகளும் உருவாக்கப்பட்டன. இவற்றிலிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை சுமாராக 20லட்சம் ஆகும். இது தவிர சுமாராக ஒரு கோடி பேர் தற்காப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர், பொறியியல் அரண்களைக் கட்டிக் கொண்டிருந்தனர்.

றும் தேசியப் பொருளாதாரத்தை யுத்த வழிக்கு மாற்றுமாறும் இராணுவத்தை சகல வழிகளிலும் பலப்படுத்துமாறும் எதிரி ஆக்கிரமித்த இடங்களில்கெரில்லா இயக்கத்தை வளர்த்திடுமாறும் சித்தாந்த-அரசியல் பணி முழுவதையும் மாற்றியமைத்திடுமாறும் இந்த ஆணை கட்சி, சோவியத் மற்றும் சமூக ஸ்தாபனங்களிடம் கோரியது. ''ஒரு நிமிடத்தைக் கூட வீணடிக்காது, எதிரியுடனான போராட்டத்தில் ஒரு வாய்ப்பைக் கூட நழுவ விடாது விரைவாகஒழுங்குபடுத்திக்கொண்டு இயங்கும் திறமையைத் தான் இப்போது எல்லாமே பொறுத்துள்ளது.'' என்று ஆணையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இந்த ஆணை அப்போது ''ஒரு மாபெரும் அபாய எச்சரிக்கை மணியாக ஒலித்தது. 'சோஷலிசத் தாயகம் அபாயத்தில் உள்ளது, என்ற பிரபல லெனினுடைய அறைகூவலின் எதிரொலிகள் இதில் கேட்டன. 'எல்லாம் போர் முனைக்கே! எல்லாம் வெற்றிக்காக!' எனும் கோஷத்தின் மூலம் கட்சி ஒவ்வொரு சோவியத் களிலேயே இராணுவத் தளபாடங்களை-டாங்கிகளையும் விமானங்களையும் - உற்பத்தி செய்யும் பிரச்சினைகள் சம்பந்தமாக சில கூட்டங்கள் அகில ருஷ்ய கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்திய கமிட்டியின் பொலிட்பீரோவில் நடைபெற்றன. ஆயுத உற்பத்தி, தொழிற்துறைகளை நாட்டின் கிழக்கத்தியப் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லுவது ஆகியவற்றின் மீது கட்சியின் மத்திய கமிட்டி பெரும் கவனம் செலுத்தியது. உணவுப் பொருள் இருப்புகள் முதலில் செஞ்சேனைக்கும் தொழிற்துறை மையங்களில் இருந்த மக்களுக்கும் அனுப்பப்பட்டன. நிதி இருப்புக்களும் இராணுவச் செலவீனங்களைஈடு கட்டுவதற்காக அனுப்பப்பட்டன.

பொலிட்பீரோவின் தீர்மானத்திற்கேற்ப ''போர்க் காலத்தில் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களின் வேலை நேரத்தைப் பற்றிய'' சுப்ரீம் சோவியத்தின் ஆணை பிறப்பிக்கப் பட்டது. இதன்படி கட்டாயமான கூடுதல் வேலை நேரங்கள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டன. விடுமுறைகள் ரத்து செய்யப்பட்கள் மற்றும் இராணுவ வட்டங்களின் இராணுவக் கவுன்சில்களுக்கும், இவை இல்லாத இடங்களில் படை யூனிட்டுகளின் தலைமை உறுப்புகளுக்கும் அளிக்கப்பட்டன.

அக்டோபர் 13 ஆம் திகதி மாஸ்கோவில் கட்சித் தொண்டர்களின் கூட்டம் நடைபெற்றது இது ஜேர்மன் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உறுதியான, ஈவிரக்கமற்ற போராட்டத்தை நடத்துமாறும் கட்டுப்பாட்டைப் பலப்படுத்துமாறும் பீதியை பரப்புபவர்கள், பேடிகள், துரோகிகளுக்கு எதிராக உறுதியாகப் போராடுமாறும் கம்யூனிஸ்டுகள், கம்சமோல் உறுப்பினர்கள், நகரின் உழைப்பாளிகள் அனைவருக்கும் அறைகூவல் விடுத்தது, நகரில் தொழிலாளர் பட்டாலியன்கள் தோற்றுவிக்கப்பட்டன. மாஸ்கோ தொழிற்சாலைகளில் ஆயுத உற்பத்தி முழுமூச்சோடு நடைபெற்றது.

ஒரு சில நாட்களில் 25 தனி கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கம்பெனிகளும் பட்டாலியன்களும் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் முக்கால்வாசி கம்யூனிஸ்டுகளும் கம்சமோல் உறுப்பினர்களும் இருந்தனர். பெரும்பாலும் காலகட்டத்தில் மாஸ்கோவாசிகள் மொத்தமாக 676 கி. மீ. டாங்கி எதிர்ப்பு அகழிகளையும் 445 கி. மீ. டாங்கி எதிர்ப்புக் குழிகளையும் தோண்டினர். 1,300 கி. மீ.க்கும் அதிகமான நீளத்திற்கு இரும்பு முள் கம்பி தடைகளைப் போட்டனர். 380 கி. மீ. நீளத்திற்கு டாங்கி எதிர்ப்புத் தடைகளை உருவாக்கினர். 30,000க்கும் அதிகமான பீரங்கி மேடைகளைக் கட்டினர். மாஸ்கோ அருகில் 1,528 கி. மீ. தூரத்திற்கு காட்டு தடையரண்கள் உருவாக்கப்பட்டன. மாஸ்கோ பிராந்தியத்தில் எதிரியிருந்த பகுதிகளில் 41 செரில்லாப் படை அணிகள் இயங்கின. இவை நிரந்தர இராணுவத்திற்கு பெரிதும் உதவின.

இந்நடவடிக்கைகளாலும் இது போன்ற பிற நடவடிக்கைகளாலும் யுத்தத்தின் ஆரம்பக் கால தற்காலிக இடர்ப்பாடுகளைச் சமாளித்து எதிரியின் மீது இறுதி வெற்றியை அடைவதற்கான உறுதியான அடித்தளம் இடப்பட்டது.

# இவர்களுக்கு ஒரு நிவாரணமும் இல்லையா?

ஆசிரியர்,
ஈழநாதம்.

இன்று நடைபெற்று வரும் சிறிலங்கா இராணுவ வெறியாட்டத்தின் விளைவாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் யாழ்மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வந்துள்ளனர். இவ்வாறு இடம் பெயர்ந்து வந்துள்ள அகதிகளில் குறிப்பிட்ட சிலர் யாழ். நகரப்பகுதியில் தமது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தற்காலிகமாக தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு தஞ்சம் புகுந்துள்ளவர்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நகருக்கு வெளியில் உறவினர்கள் வீட்டில் தங்கியிருப்பவர்களுக்கு இரண்டு கட்ட நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு சில மோசடிகள் நடைபெற்றமையால் இவ்வாறானவர்களுக்கு எதுவித நிவாரணமும் இல்லையென இதற்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளவர்களில் சிலர் தவிர்க்க முடியாத காரணங்களினால் அகதி முகாம்களில் தங்க முடியாது போகலாம். இவ்வாறு வீடுகளில் தஞ்சமடைந்துள்ளவர்கள் வீடுகளில் தங்கமட்டுமே வசதி பெற்றுள்ளனர். ஆனால் அடிப்படை உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். குடாநாடு முழுவதும் இன்று பாரிய உணவுப் பஞ்சத்தில் சிக்குண்டு இருப்பதனால் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகள் வீட்டுக்காரரிடம் உணவுப் பொருட்கள் பெற்றுக்கொள்வது என்பது முடியாத காரியம். எனவே இவ்வாறான அகதிகளை சரி

### மக்கள் மடல்

யாக இனம் கண்டு இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

மேலும் இவ்வாறு தஞ்சம் புகுந்துள்ளவர்களுக்கு ப.நோ.கூ. சங்கத்தில் உணவுப் பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கான பங்கீட்டு அட்டைகளும் வழங்கப்படமாட்டாதாம் இந்நிலையில் லொறிகளில் வருகின்ற சீனி, மா, பால்மா, போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கூட இவர்களால் பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் ஏற்படும்.

வீடுகளில் தஞ்சமானவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக இவர்களுக்கு நிவாரணங்கள் வழங்க மறுப்பது விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே உள்ளது. எனவே இவ்வாறான அகதிகளுக்கு அகதிகள் நிவாரணமோ அல்லது பங்கீட்டு அட்டையாவது வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றோம்.

S. ஆனந்தன்
மன்னார்

# பிரதமர் சிங் சோவியத் பயணம் தென் ஆசியபாதுகாப்பு ஆராயப்படும்

(டில்லி)

இந்தியப் பிரதமர் திரு வி. பி. சிங். நான்கு நாட்களுக்கான உத்தியோகபூர்வ பயணமொன்றினை மேற்கொண்டு நாளைத் திங்கட்கிழமை சோவியத் ரஷ்யாவுக்கு செல்லவுள்ளார்.

பிரதமர் சிங் தொடர்ந்து நான்கு நாட்கள் சோவியத்தில் தங்கியிருக்கும் பொழுது தலைவர் கொர்பசேவ், உட்பட பல உயர் மட்டத் தலைவர்களையும் சந்திப்பார்.

இந்த சந்திப்புக்களின் போது தென் ஆசிய பிராந்தியத்தின் பாதுகாப்பு சூழல், ஜம்மு கஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானின் தலையீடு ஆகிய விடயங்கள் குறித்து முக்கியமாக ஆராயப்படும்.

இவைத்தவிர இந்தியசோவியத் வர்த்தகம் சம்பந்தமாகவும் விவாதிக்கப் படவுள்ளதுடன்; இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தின் பண சமநிலை குறித்தும் ஆராயப் பட உள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

பிரதமர் சிங்கின் இந்தப் பயணத்தில் இந்தியாவின் நிதி, வர்த்தகம் உட்பட்ட உயர்மட்டக் குழு ஒன்றும் பிரதமருடன் சோவியத் செல்ல உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# அரபு நாடுகளின் உட்பூசல் இஸ்ரேலுக்கு சாதகமாகலாம்!

(கெய்ரோ)

அரபு நாடுகளுக்கிடையிலான உட்பூசல்கள், மத்திய கிழக்கில் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் இஸ்ரேலுக்கு சாதகமாக அமைந்து அச்சம் தோன்றியுள்ளதாக எகிப்திய தலைவர் முபராக் தெரிவித்துள்ளார்.

எண்ணெய் உற்பத்தி, விற்பனை ஆகிய விடயங்களில் ஈராக் நாட்டிற்கும் அதனுடைய அண்டை நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து கருத்து பூசல்கள் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

அரபு நாடுகளுக்கிடையிலான இந்த கருத்துப் பூசல்களை ஆதாரமாகக் கொண்டே எகிப்திய தலைவர் இந்த அச்சத்தின் வெளிப்பாட்டினை அரபு நாடுகளுக்கு தெரியப் படுத்தியுள்ளார்.

இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் அரபு ஒற்றுமையை பேண முன்வர வேண்டும் என்ற அறைகூவலையும் எகிப்திய தலைவர் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது

Registeuredas News Paper at the G. P. O.

ஈழநாதம்

# வவுனியாவிலிருந்து அகதிகளாக தமிழகம் சென்ற 31 பேர் கடலில் பலி!

## படகு கவிழ்ந்தும் உயிர்தப்பியோர் தரும் தகவல்

(வவுனியா)

இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கையினால் அச்சமடைந்து, படகு ஒன்றில் தலைமன்னார் வழியாக தமிழகத்தை நோக்கிச் சென்ற சமயம் படகு கவிழ்ந்ததில் 31 பேர் மரணமாகியுள்ளனர் என்று கடைசியாகக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது தெரிந்ததே. மேற்படி படகில் சென்றவர்கள் அனைவரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது,

சம்பவம் இடம்பெற்ற சமயம், கவிழ்ந்த படகின் ஓரத்தைப் பிடித்து பலர் உயிர் பிழைத்துள்ளனர். சில தாய்மார் தமது குழந்தைகளை ஒரு கையினால் பிடித்துக் கொண்டு மறுகையினால் படகின் ஓரத்தை பிடித்துக் கொண்டனராம்.

வேறொரு படகு வந்து உயிர் பிழைத்திருந்த பலரை ஏற்றிக் கொண்டதாம்.

மேற்படி சம்பவத்தில் இறந்தவர்களின் விபரம் வருமாறு:

க. வேலுப்பிள்ளை, இவரது மனைவியான வே.மாணிக்கம் பிள்ளைகள் - வே.பரிமளாதேவி, வே. மேகலாதேவி, வே. சியாமளாதேவி, வே. சுரேஸ்குமார், வே. துஷியந்தன் ஆகியோர் தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்களாவார்கள்.

ச. சரஸ்வதி, ச. சந்திரன், ச. சந்திரகலா ஆகியோரும் தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்களாவார்கள்.

பி. தர்மராஜ், த. ஜெயவேணி, த. யோகேஸ்வரி. த. கிருஷ்ணராஜ் ஆகியோர் பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்களாவார்கள்,

நல்லசாமி ஜெயலட்சுமி என்ற பெண் பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த பெண்ணாவார்,

ராஜரத்தினம் இந்திராணி, ரா. ரூபன் ஆகியோர் வைரவர் புளியங்குளத்தைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்கள் ஆவார்கள்.

லோகநாதன் அருள் தீபன், லோ. அருளோஜினி ஆகியோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தோணிக்கல் வாசியாவார்கள், இராமையா மஞ்சுளா என்னும் தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த பெண்ணும் மரணமாகியுள்ளனர்.

இவர்களைத் தவிர மேலும் 11 பேர் மரணமாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களின் பெயர், விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இதே சமயம், இச்சம்பவத்தில் உயிர்பிழைத்த 11 பேர் மீண்டும் தலைமன்னார் பகுதிக்கு திரும்பி வந்துள்ளனர். (தி)

இலங்கையில்

## அகதி முகாம் ஐ. நா. ஊடாகவே அமைய வேண்டும்

### - கருணாநிதி

(சென்னை)

''தமிழ் மக்களுக்கான அகதி முகாம்கள் இலங்கையிலேயே அமைக்கப்படும் ஒரு நிலைமை உருவாகுமெனில், முகாம் அமைத்தல், பராமரித்தல், பாதுகாத்தல் உட்பட அனைத்தும் அகதிகள் சம்பந்தப்பட்ட ஐ. நா. தூதரக சர்வதேச நிறுவனங்கள் மூலமே மேற்கொள்ளப்படல் வேண்டும்'' என்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அகதி முகாம்கள் அமைப்பது தொடர்பாக பரிசீலிக்கப்பட உள்ளதாக பிரதமர் வி. பி. சிங் டில்லியில் தெரிவித்துள்ளார். பிரதமரின் இந்த கூற்று தொடர்பாக செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே முதல்வர் இவ்வாறு கூறினார்.

இந்த முகாம் அமைத்தல் தொடர்பாக அண்மையில் தாம் டில்லி சென்றிருந்த பொழுது வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ராலுடன் விரிவாக கதைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

முதல்வர் தொடர்ந்து அங்கு பேசுகையில் தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசின் யுத்தம் கூடிய விரைவில் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அமைதி பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணுதல் அவசியமென்றும் கூறியதுடன், இது விடயத்தில் இந்தியா சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றும் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழகத்தில் இடம்பெற்ற மாநிலம் தழுவிய ஹர்த்தால் தொடர்பாக கூறிய அவர் தமிழ் மக்களின் மன உணர்வுகளை இலங்கை அரசு இந்த ஹர்த்தால் மூலம் நன்கு புரிந்து கொள்ளும் என்று தாம் நம்புவதாக தெரிவித்தார்.

## இரண்டாம் கட்ட நிவாரணம்

(பருத்தித்துறை)

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து அகதிகளாகப் பருத்தித்துறைப் பகுதிக்கு வந்து தஞ்சமடைந்த அகதிகளுக்குப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. (25)

## நிவாரணம் தருமாறு மீனவர் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மாரீசன் கூடல் மாதகல், இளவாலை, கடற் தொழிலாளர் கடற் தொழில் செய்ய முடியாது பெரும் கஷ்டப்படுகின்றனர்.

கட்டுமரத்திலோ படகிலோ மீன்பிடிக்க கடலில் செல்ல முடியாதிருக்கின்றது.

கடற்படையினர் மீனவரை மீன்பிடிக்க விடாது அடித்து துன்புறுத்துகின்றனர்.

இதனைச் சுட்டிக்காட்டி தமது பசி போக்க, கடற் தடை வலயம் முன்னர் அமுலிலிருந்த போது தமக்கு முத்திரை தந்து உதவியது போல உதவவேண்டும் என மகஜர் ஒன்றை சண்டிலிப்பாய் உதவி அரசாங்கஅதிபருக்கு அனுப்பியுள்ளனர்.

## பாடசாலைகளுக்கு மூடு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் மாணவர்கள் வரவின்மையால்மூடப்பட்டே இருக்கின்றன.

டியூட்டறிகளுக்கும் மாணவர்கள் செல்வதில்லை (25)



ஸ்ரீலங்கா விமானப் படையால் கோட்டைப் பகுதியில் வீசப்பட்ட உள்நாட்டுத் தயாரிப்பான ஐம்

## யாழ். மாவட்டத்தில் மொத்தம் 3,12,880 அகதிகள்

(யாழ்ப்பாணம்)

இறுதிக் கணக்கெடுப்பின் படி யாழ். மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த அகதிகளின் எண்ணிக்கை 3,12,880 பேர் ஆகும்.

யாழ். மாவட்டத்தில் 352 முகாம்கள் உள்ளன; இவற்றில் 62576 குடும்பங்கள் அகதிகளாகவுள்ளன. இவற்றில்

### அகதிகளுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிவித்தார்.

### அப்பாவி

இலங்கைப் பிரச்சினை குறித்து பாரதிய ஜனதா கட்சி அனுதாபத்துடனும், கவலையுடனும் அனுகி வருகிறது என்றும் திரு. அட்வானி தெரிவித்தார்.

சென்னையில் தற்போது நடைபெறும் பாரதிய ஜனதாக் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினையும் அது தொடர்பான ஏனைய பிரச்சினைகள் பற்றியும் விரிவாக விவாதிக்கப்படும் என்று பாரதிய ஜனதா கட்சி பொதுச் செயலாளர் ஜே. பி. மாத்தூர் தெரிவித்துள்ளார்.

### மருந்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்துசேர்ந்தன; கடந்த செவ்வாய்க்கிழமை இங்கிருந்து கொழும்புக்குச்சென்ற உணவு வாகனத்தொடரிலேயேஇக்கடிதப்பொதிகள் யாவும் நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்

## வவுனியாவில் மினி முகாம்

(வவுனியா)

வவுனியா காத்தார் சின்னக்குளம் பாடசாலையில் இராணுவத்தினரின் மினி முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அயலிலுள்ள நெடுங்குளம், மடுக்கந்த, மாமடு போன்ற சிங்களக் கிராமங்களை பாதுகாக்கும் நோக்குடனேயே மேற்படி இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

காத்தார் சின்னக்குளம் பகுதியில் வாழும் தம்ழ்மக்கள் இராணுவத்தினரின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி ஏலவே இடம்பெயர்ந்து சென்று விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## தோட்டத்தில் வெடிக்காத ஷெல்; ஒருவர்பலி

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்திற்கு நீர் இறைக்கச் சென்றவர்கள் அங்கு காணப்பட்ட வெடிக்காத ஷெல்லை எடுத்து வீசியதால் அந்த ஷெல் வெடித்து ஒரு பெண்மணி மரணமானார் இருவர் காயமடைந்தனர்.

## கப்பலில் உணவு வரலாம்

அடுத்த தடவை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான உணவுப்பொருள் கப்பலி

## அச்சுவேலியில் ஹெலி தாக்குதல்

(அச்சுவேலி)

வியாழக்கிழமை (19ம்திகதி) ஹெலியில் இருந்து அச்சுவேலி பத்தமேனி, இடைக்காடு ஆகிய பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் அச்சுவேலி வடக்கிலுள்ள கணபதி கணேசலிங்கம் என்பவரின் வீடு பலத்த சேதத்திற்கு உள்ளாகியது அங்கு குடியிருந்த தம்புசெல்லையா என்பவரின் உடைமைகள் உட்பட பல்லாயிரக்கணக்கான பெறுமதி உள்ள உடைமைகள் சேதமடைந்தன.

பத்தமேனியில் உள்ள கணபதி தம்பிப்பிள்ளை என்பவரின் வீடும் ஷெல் தாக்குதலால் சேதமடைந்தது. செல்லமுத்து நடராசா (வயது 70) வயோதிபர் உட்பட கதிரமலை கோபி (18 வயது) எஸ் கந்தசாமி (48 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர். பல ஷெல்கள் வெளி இடங்களில் வீழ்ந்து வெடித்தன. (16)

## யுத்தம் அபிவிருத்தியைப் பாதிப்படையச் செய்துள்ளது

### - பிரேமா

(அளுத்நுவர)

வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலைப்புலிகளுடன் நடைபெறும் யுத்தம் காரணமாக ஆயுதப்படையினரை பலப்படுத்துவதற்கு ஐநூறு கோடி ரூபாவை அரசாங்கம் செலவிடவேண்டியுள்ளது.

இவ்வாறு நேற்று இங்கு இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸா கூறினார்.

இந்த அனாவசியயுத்தத்தை தவிர்க்கும் நோக்கத்திற்காகவே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்தினேன்

வடக்கு கிழக்கில் தற்போ

### 17 பொலிசார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக ஆயுதம் தூக்கிப் போராட விரும்பாததினாலே சரணடைந்ததாகக் கூறினார். விடுதலைப் புலிகள் உங்களை எவ்வாறு கவனித்தார்கள் என்று கேட்டதற்கு நல்ல முறையில் தம்மைக் கவனித்ததாகவும் உணவு, உடை போன்றவற்றில் எந்தக் குறையும் இன்றி உபசரித்ததாக

ந்து அகதிகளாகப் பருத்தித் துறைப் பகுதிக்கு வந்து தஞ் சமடைந்த அகதிகளுக்குப் பருத்தித்துறை உதவி அர சாங்க அதிபர் அலுவலகத் தில் இரண்டாம் கட்ட நிவா ரணம் வழங்கப்பட்டு வரு கின்றது. (25)

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள பெரும்பாலான பாட சாலைகள் மாணவர்கள் வரவின்மையால்மூடப்பட்டே இருக்கின்றன.

டியூட்டறிகளுக்கும் மாண வர்கள் செல்வதில்லை (25)



ஸ்ரீலங்கா விமானப் படையால் கோட்டைப் பகுதியில் வீசப்பட்ட உள்நாட்டுத் தயாரிப்பான ஐம் பத்தாறு கிலோ குண்டு. அதன் உயரத்தை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

# யாழ். மாவட்டத்தில் மொத்தம் 3,12,880 அகதிகள்

(யாழ்ப்பாணம்)

இறுதிக் கணக்கெடுப்பின் படி யாழ். மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த அகதிகளின் எண்ணிக்கை 3,12,880 பேர் ஆகும்.

யாழ். மாவட்டத்தில் 352 முகாம்கள் உள்ளன; இவற் றில் 62576 குடும்பங்கள் அக திகளாகவுள்ளன. இவற்றில் வெளிமாவட்டங்களைச் சேர்ந் தவர்கள் 7905 குடும்பங்கள் என யாழ். செயலகப் பதி வேடு தெரிவிக்கின்றது. (ம)

### அகதிகளுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) தாகத் தெரிவித்தார்.

இலங்கை அகதிகள் தொ டர்பாக நிருபர்கள் மத்தியில் பேசிய முதல்வர் கருணாநிதி இலங்கை விமானப் படைக ளால் நடாத்தப்பட்ட குண்டு வீச்சில் தாம்பட்ட இன்னல் களை ஐநூறுக்கு மேற்பட்ட பெண்கள் கண்ணீர் மல்க கூறியதாகவும், கைது செய் யப்படும் இளைஞர்களின் கைகள் படையினரால் வெட் டப்படுவதாக தம்மிடம் கூறப் பட்டதாகவும் அவர் தெரி வித்தார்.

கைதாகும் பதினைந்து வய துப் பெண்கள் பலர் காணா மல் போய்விட்டதாகவும் அவர்கள் தெரிவித்ததாக முதல்வர் சொன்னார்.

சகல மட்டத்திலுமான மக் கள் இராணுவ நடவடிக்கை களினால் உடைமைகள் அழிக் கப்பட்ட நிலையில் கஷ்டப் படுவதுடன் ஆயிரக்கணக்கா னோர் அகதிகளாக தமிழகத் திற்கு வரமுடியாத நிலையில் அல்லல்படுவதாக தம்மிடம் அகதி மக்கள் கூறியதாகவும் கலைஞர் கருணாநிதி நிரு பர்கள் மத்தியில் கூறினார்.

க. பொ. த. உ. தரப் பரீட்சை

# வடக்கு-கிழக்கு மாணவருக்கு வேறொரு தினத்தில் பரீட்சை

(கொழும்பு)

எதிர்வரும் ஜீ. சி. ஈ. உயர் தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி பாராளுமன் றத்தில் கூறியுள்ளார்.

கேள்வி ஒன்றிற்குப் பதிலளி த்த அமைச்சர் தற்போதுள்ள வடக்குக் கிழக்குப் பிரச்சினை களால் அப்பகுதிப் பரீட்சார்த் திகளுக்கு வேறொரு தினத் தில் பரீட்சை எழுத வாய்ப் பளிக்கப்படுமெனவும்கூறினார்

## லியோக் கழக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

லியோக்கழகஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளைமாலை 4 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ். கல்லூரியில் நடைபெற வுள்ளது. இக் கூட்டத்திற்கு லியோக் கழக அங்கத்தவர் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)


## அறிவித்தல்

1. வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் சகலரையும் 25-07-90 புதன்கிழமை புளியங்குளம் மத்திய மருந்தகத்தில் சமுக மளிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

2. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்க ளில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சகலரும் உடன் தத்தமது நிலையங்களுக்குச் செல் லவும். தமது நிலையங்களுக்குச் செல்ல இயலாதவர் கள் அதற்கு அண்மையிலுள்ள நிலையத்திலோ அல்லது தற்காலிகமாக புளியங்குளம் மத்திய மருந்தகத்தில் இயங்கும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணி மனையிலோ சமுகந்தரவும்.

கே. மாணிக்கம்.
பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்
வவுனியா.

(R/540)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ‘‘ஈழநாதம்’’ பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


சென்னையில் தற்போது நடைபெறும் பாரதிய ஜன தா கட்சி செயற் குழுக் கூட்டத்தில் இலங்கைப் பிரச் சினையும் அது தொடர்பான ஏனைய பிரச்சினைகள் பற்றியும் விரிவாக விவா திக்கப்படும் என்று பாரதிய ஜனதா கட்சி பொதுச் செய லாளர் ஜே. பி. மாத்தூர் தெரிவித்துள்ளார்.

### மருந்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) வந்துசேர்ந்தன; கடந்த செவ் வாய்க்கிழமை இங்கிருந்து கொழும்புக்குச்சென்ற உணவு வாகனத்தொடரிலேயேஇக்கடி தப்பொதிகள் யாவும் நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டன.

இக்கடிதங்கள் யாழ். தபா லகத்தில் தரம் பிரிக்கப்பட்டு நாளை திங்கட்கிழமையில் இருந்து உரியவர்களுக்கு விநி யோகிக்கப்படும். இதேபோல் இவ்வாகனங்களில்கடந்தசெவ் வாய்க்கிழமை இங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டகொழு ம்புக்கான கடிதங்கள் தற் போது கொழும்பில் உரிய விலாசதாரர்களுக்கு விநியோ கிக்கப்பட்டு வருகிறது.

தற்போது யாழ்ப்பாணத் தில் தபாலில் சேர்க்கப்படும் கொழும்புக்கான கடிதங்கள் எதிர்வரும் புதன் அல்லது வியாழக்கிழமை இங்கிருந்து எடுத்துச் செல்லப்படவிருக் கின்றன என்று யாழ். செஞ் சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (75)

### குறையைப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) வரின் வழிகாட்டல் உண்டு. இந்த நிலையில் எமது ஆயு தங்களை எந்த ஒரு அடக்கு முறையாளர்களாலோ, அரா ஜக சக்திகளாலோ திருப்பி எடுக்க முடியாது'

‘‘எந்தவொரு எதிர்விளைவு கள் வந்தாலும் கூட நாங்கள் பின்நோக்கிச் செல்லமாட் டோம். தமிழ் மக்களின், தமிழர்களது மண்ணின் வர லாற்றை மாற்றியமைக்கும் எங்களது இந்தப் போராட் டத்திற்கு உங்களிடமிருந்து போதியளவு பங்களிப்புத் தேவை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அந்தப் பங்களிப்பின் ஒரு அம்ச[illegible]த்தான் இனாமாக அல்[illegible] கடனாக தாயக [illegible]நிதியை உங்களிட[illegible] கோருகின்றோம். [illegible] நிதியை மாத்திரம் கொடுத்து விட்டு இருக்காது எவ்வளவுதான் அழிவுகள் வந்தபோதும் அவற்றை எதிர்த்து நின்று போராடும் வல்லமை உங்களுக்கு உரு வாக வேண்டும். இன்றைய போராட்டத்தில் நீங்கள் அனைவரும் பங்காளிகளாக மாறவேண்டும்'' என்றும் அவர் அங்கு கேட்டுக்கொண் டார்.

### ஜோசெப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) வைத்து இராணுவத்தால்சுற் றிவளைக்கப்பட்டு கைது செய் யப்பட்ட இளைஞர்களில் நான்கு பேர் மட்டும் இராணு வத்தினரால் தடுத்து வைக் கப்பட்டிருப்பதாக இராணு வத்தினரால் கைதாகி, விடுத லைசெய்யப்பட்டகுமாரவேல் கனகலிங்கம் என்ற இளைஞர் தெரிவித்தார்.

நடக்கமுடியாத நிலையில் வைத்திய சிகிச்சை பெற்று வரும் அந்த இளைஞர் தான் முகமூடி அணிந்திருந்த ஒருவ ரினால் அடையாளம் காணப் பட்டதாகவும் அதையடுத்து தான் உட்பட பதின்நான்கு பேர் கோவில் புதுக்குளம் பகு தியில் வைத்து கைது செய் யப்பட்டு, இராணுவ முகா முக்கு அழைத்துச் செல்லப் பட்டு, நிர்வாணப்படுத்தப் பட்ட நிலையில் ஐந்து நாட் கள் எஸ்-லோன் குழாய்களி னால் தாக்கப்பட்டதையும் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இளைஞர்களில் பத்துப்பேர் கடந்த 14 ஆம் திகதி விடுதலை செய்யப்பட் டனர். (தி)

# வெடிக்காத ஷெல்; ஒருவர்பலி

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்திற்கு நீர் இறைக்கச் சென்றவர்கள் அங்கு காணப்பட்ட வெடிக் காத ஷெல்லை எடுத்து வீசி யதால் அந்த ஷெல் வெடித்து ஒரு பெண்மணி மரணமானார் இருவர் காயமடைந்தனர்.

# கப்பலில் உணவு வரலாம்

அடுத்த தடவை கொழும்பி லிருந்து யாழ்ப்பாணத்திற் கானஉணவுப்பொருள் கப்பலி லேயே கொண்டுவரப்படும் என்று நம்பப்படுகிறது. எதிர் வரும்செவ்வாய் அல்லது புதன் கிழமை பருத்தித்துறை துறை முகத்துக்கு வந்துசேரக்கூடிய தாக உணவுப் பொருள்களை கப்பலில் ஏற்றும் வேலைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது.

இக்கப்பல் திரும்பும்போது எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்புக்கான கடிதங்களும் இதில் அனுப்பப்பட இருக் கின்றன. (75)

# குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா செட்டிகுள கங் கன் குளம் என்னும் இடத்தில் நேற்றுஇருபொம்மர் விமானங் கள் நடத்திய தாக்குதலில் இரண்டு பொது மக்கள் காய மடைந்துள்ளனர். (ம)

### மகனை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) வாறு தனது மகன் பாஸ்கரன் (12 வயது) என்பவரை சிறி லங்கா அரசுக்கு எதிரான போரில் ஈடுபடும் வகையில் தென்மராட்சி பிரதேசவிடுத லைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு, பாப்பா விடம் கையளித்துள்ளார்.

இத்தாயின் கணவர் சமூகத் துரோகிகளால் கடந்த வரு டத்தில் சுட்டுக் கொல்லப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (35)

### கைது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) ரைகஸ் (பச்சைப் புலிகள்) தான் பிடித்துள்ளனர் என் றும் எமக்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை என்றும் இராணுவத்தினர் கூறியுள்ள னர். (ம)

### அரபுநாட்டில் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) அடித்துக் கொல்லப்பட்டார்.

இப்பெண்ணுக்குஉதவியாகச் சென்ற முதியவர் ஒருவரையும் இம்மக்கள் கற்களால் அடித்து கொன்றுள்ளனர். (ம)

# பாதிப்படையச் செய்துள்ளது

- பிரேமா

(அளுத்நுவர)

வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலைப்புலிகளுடன் நடை பெறும் யுத்தம் காரணமாக ஆயுதப்படையினரை பலப் படுத்துவதற்கு ஐநூறு கோடி ரூபாவை அரசாங்கம் செல விடவேண்டியுள்ளது.

இவ்வாறு நேற்று இங்கு இடம்பெற்ற வைபவம் ஒன் றில் பேசிய ஜனாதிபதி பிரேம தாஸா கூறினார்.

இந்த அனாவசியயுத்தத்தை தவிர்க்கும் நோக்கத்திற்கா கவே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்தினேன்

வடக்கு கிழக்கில் தற்போ தைய யுத்தம் முழு நாட்டை யுமே பாதித்துள்ளது. இந்த ஐநூறு கோடி ரூபாவை அபிவி ருத்தி வேலைகளுக்கு பயன் படுத்தலாம் எனவும்தெரிவித் தார்.

### 17 பொலிசார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) எதிராக ஆயுதம் தூக்கிப் போராட விரும்பாததினாலே சரணடைந்ததாகக் கூறினார். விடுதலைப் புலிகள் உங்களை எவ்வாறு கவனித்தார்கள் என்று கேட்டதற்கு நல்ல முறையில் தம்மைக் கவனித் ததாகவும் உணவு, உடை போன்றவற்றில் எந்தக் குறை யும் இன்றி உபசரித்ததாக வும் விடுதலைப் புலிகளின் உபசரிப்பைத் தம்மால் மறக்க முடியாது என்றும் கூறினார்.

இவர்களிடம் எதிர்காலத் திட்டம் பற்றிக்கேட்ட போது தமது உற்றார், உறவினர் களைச் சென்று பார்த்து விட்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேரவிருப்பதாக வும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி இந் நிகழ்ச்சியில் பேசும் போது பத்திரிகையாளர் முன் இவர்கள் விடப்பட்ட தன் காரணம் மக்கள் உண்மை நிலை தெரிய வேண் டும் என்பதற்காகவே என் றார்.

மேலும் தமது இடங்களுக் குப் போக விரும்புபவர்களை உடன் அனுப்பி வைக்கப்படு வார்கள் எனவும் தெரிவித் தார்.

விடுவிக்கப்பட்ட பொலி சாரின் பெயர் விபரங்கள் வருமாறு:-

அ. நவாஸ் (வயது 19) அக் கரைப்பற்று எம். ஏ. தாசீர் (வயது 21) கிண்ணியா, வைர முத்து வாசன் (வயது 20) மட்டக்களப்பு, எஸ் ரீ. எம். மின்சாத் (வயது 21) பொத் துவில், சி. சிவயோகராசா (வயது 28) கழுவாஞ்சிக்குடி, ஓ. எல் ராபால்தீன் (வயது 19) அம்பாறை, ஏ. ஆர். பைசல் ரகுமாத் (வயது 21) அம்பாறை, எம். வரதராஜன் (வயது 23) குருக்கள் மடம், துரைராஜாமனோகரன் (வயது 22) வவுனியா, எம். ஐ. எல்) செய்யத் சாலீத் (வயது 20) அட்டாளைச்சேனை, கே.எல். எம். அஸீஸ் (வயது 21) அம் பாறை, த. ரவீந்தர்ராஜன் (வயது 23) திருமலை, எஸ். வில்சன் (வயது 23) திருக் கோயில் ரீ. பதுர்தீன் (வயது 22) நிந்தாவூர், சி. பற்குணம் (வயது 22) கொக்கட்டிச் சோலை, எஸ். எம். முகமட் பாதீஷ் (வயது 21) அட்டா ளைச்சேனை, சீனித்தம்பிபாஸ் கரன் (வயது 21) ஆகியோர் ஆவர். (ம)

# ஹெலி மூலம் துண்டுப்பிரசுரம்

(வவுனியா)

இராணுவ முகாம்களைச் சுற்றி விடுதலைப் புலிகள் நிற்கின்றனர். படையினருக்கு உணவு, மருந்து வசதிகள் இல்லாமல்இருக்கிறது, பொது மக்களாகிய நீங்களும் படை யினருக்கு மருந்து, உணவு வசதி செய்ய விடுதலைப் புலி களுக்கு கூறி ஆவன செய்ய வும்.

இவ்வாறு கூறப்படும் துண் டுப் பிரசுரங்கள் நேற்று ஹெலிக்கப்டர் மூலம் வவு னியா பகுதியில் வீசப்பட்டன

### மூன்றுமணி ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) பகுதி கோட்டைக்கு வெளியே வந்து வீழ்ந்துள்ளன.

பொம்மர் விமானத்தின் குண்டுவீச்சால் யாழ். தொலைத்தொடர்பு அலுவ லக கட்டட மதில், பொது நூலகபகுதி, திறந்த வெளி அரங்கு ஆகிய இடங்கள் சேத மடைந்தன.

### வானத் ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) றுக்கும் மேற்பட்ட வீடுகளும் நூற்றுக்கும் மேற்பட்ட கடை களும், பல கோடி ரூபா பெறு மதியான தளபாடங்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள் ளன.

ஐந்து தடவைகள் இப்பகுதி யில் விமானங்கள் குண்டுகளை போட்டு வீடுகளையும், உடை மைகளையும் அழித்து வந்துள் ளன.

நெருக்கமாக மக்கள் வாழும் இப்பகுதியில் இருந்து மூவாயி ரத்துக்கும் மேற்பட்ட குடும் பங்கள் ஏற்கனவே அகதி களாக வெளியேறி இருந்தமை யால் உயிர்ச் சேதங்கள் இது வரை ஏற்படவில்லை.